TAMILMANAM | தமிழ்மணம்
Peer-Reviewed · International · Monthly Journal of Tamil Studies

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in


| Manuscript ID | TMN-12-04-2026-42 | Article type | Original Research Article |
|---|---|---|---|
| Received | 10 September 2026 | Revised | 12 September 2026 |
| Accepted | 19 September 2026 | Published online | 19 September 2026 |
| Volume / Issue | Vol. 12, Issue 04 | Pages | 582-590 |
| DOI | https://doi.org/10.63300/tm12042026.46 | | |


[ORIGINAL RESEARCH ARTICLE]

# வல்லிக்கண்ணன் கடிதங்களில் வாழ்வியல்

## Life and Living in the Letters of Vallikannan

**சி. சித்ரா,**
*முழு நேரம் முனைவர் பட்ட ஆய்வாளர், அரிய கையெழுத்துச் சுவடி,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
**முனைவர் த. ஆதித்தன் ,**
*இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
**Corresponding Author Email: chitrachinnappa97@gmail.com , Phone: 9047034291*

## Abstract

As described in the Pusalar Nayanar Puranam, while Pusalar conceived the idea of building a temple in his mind and constructed it for Lord Shiva, the Pallava King Rajasimha began constructing the Kanchi Kailasanathar Temple. The outer surrounding walls of this temple, along with all the sculptures within it, are crafted as if narrating a devotional epic. The revelation brought out through this study is the event recorded by Sekkizhar in the Periya Puranam, stating that the consecration (Kumbhabhishekam) of the holy temple built by Rajasimha and that of Pusalar's temple—which he built tirelessly day and night within his mind—occurred on the exact same day.

Based on the aforementioned core narrative, this research paper systematically categorizes and analyzes the poetic descriptions from the Pusalar Nayanar Puranam. Furthermore, it compares the similarities and differences between the mind-built temple and the royal temple constructed of stone and brick using tables and explanatory figures. The central theme of this study focuses on how this puranic section establishes the Saiva Siddhanta principle that devotion relies primarily on internal devotion and thought rather than external wealth.

**Keywords:** Pusalar Nayanar; Periya Puranam; Sekkizhar; Mind-Temple (Manakkoil); Rajasimha Pallava; Kanchi Kailasanathar Temple; Bhakti Literature; Thiruninravur.

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாற்றினைக் கட்டமைக்கும் முதன்மை சான்றாதரங்களாகக் கல்வெட்டு, செப்பேடு, ஓவியம், ஓலை, ஆவணம், கடிதங்கள் ஆகியவை திகழ்கின்றன. அவற்றுள் கடிதத்

ஆவணங்களுக்குத் தனி இடம் உண்டு. அக்கடிதமானது தமிழில் மடல், முடங்கல், கடுதாசி போன்ற சொற்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. கடித இலக்கியம் அண்மைக்காலத்தில் தான் தனியொரு இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. அன்றில் இருந்து இன்றைய அளவிலும் கடித இலக்கியமானது பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்று கூறலாம். எண்ணற்ற புலவர்களும் , தலைவர்களும், புகழ்ப் பெற்ற அறிஞர்களும் இலக்கியம், சமுதாயம், வாழ்வியல், நினைவுகள், உறவுகள், பயணங்கள் போன்ற அரிய பல கடிதங்களை எழுதி உள்ளனர். அந்த வகைமையில் வல்லிக்கண்ணன் வாழ்நாள் முழுவதும் இலக்கியம் பற்றி பேசியும் எழுதியும் வாழ்ந்தவர். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அரிய கையெழுத்துச் சுவடித்துறைச் சுவடி எண் **287** இல் இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் இடம் பெற்றுள்ளது அவற்றில் ஒன்று வல்லிக்கண்ணன் அவர்களின் கடிதம் ஆகும். வல்லிக்கண்ணனின் கையெழுத்துப் பிரதியில் (கடிதங்கள்) காணலாகும் வல்லிக்கண்ணனின் குடும்பம், சமுதாயம், தனிமனிதம், படைப்புலகம் முதலாவற்றை ஆராய்வது ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

வல்லிக்கண்ணன் – கடித இலக்கியம் – குடும்ப வாழ்வியல் – தனிமனித வாழ்வியல் – சமுதாய வாழ்வியல் – படைப்புலக வாழ்வியல் - மன உறுதி – நினைவுகள்

**முன்னுரை**

தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் சுவடி எண் **287** இல் இலக்கிய ஆளுமைகளின் கடிதங்களில் வல்லிக்கண்ணன், விக்கிரமன், லஷ்மி ஆகியோரின் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் வல்லிக்கண்ணன் கடிதங்களை மட்டும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் திசையன்விளை என்ற கிராமத்தில் 12/11/1920 அன்று ரா.மு. சுப்ரமணியபிள்ளை, மகமாயி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப்பிறந்தார். சைவ வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் கோபாலகிருஷ்ணன் ஆனால் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு சேர்க்கும் போது இவர் பெயரை கிருஷ்ணசுவாமி என்று இவர் தந்தை பதிவு செய்து விடுகிறார். ‘வல்லிக்கண்ணன்’ என்பது அவருக்கு அவரே வைத்துக்கொண்ட புனைப்பெயர். தமிழ் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு தனி தடம் பதித்தவர். வாழ்கின்ற காலமெல்லாம் நேரடியாகவும் , மறைமுகமாகவும் தமிழ் இலக்கியம் பற்றியே பேசியும் எழுதியும் வாழ்ந்தவர். பேச்சாலும், எழுத்தாலும், செயல்பாடுகளாலும் தமிழ் இலக்கியத்திற்கு நாளும் உழைத்தவர் வல்லிக்கண்ணன்.

வல்லிக்கண்ணன் கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு, வரலாறு, நாடகம், கட்டுரை என்று அனைத்து வகைமைகளிலும் எழுதிக் குவித்தார். சிறு பத்திரிக்கைகளின் அறிமுகம் இவருக்குச் சிறுவயது முதலே கிடைத்து விடுகிறது. நான்காம் வகுப்பு படிக்கும் போதே பரலி.சு.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

நெல்லைப்பரின் லோகோபகாரி என்ற சிற்றிதழும் ஒற்றுமை என்ற மாதபத்திரிகையும் அண்டை வீட்டுக்காரர்களால் இவருக்குப் படிக்கக்கிடைக்கிறது. வல்லிக்கண்ணன் 'இதய ஒலி' என்ற கையெழுத்துப் பத்திரிக்கையைத் தயாரித்தார். பத்திரிக்கையில் பக்கங்களை நிரப்ப நையாண்டி பாரதி, கோர நாதன், மிஸ்வாகி, சொனா முனா, பிள்ளையார் போன்ற புனைப்பெயர்களை அவருக்கு அவரே சூட்டிக்கொண்டு கதை, கட்டுரை, கவிதை என்று எழுதிக் குவித்தார். 'புன்னகையும் புது நிலவும்' என்ற சிறுகதைக்காக அப்பத்திரிக்கை **13** ரூபாய் எட்டணா சன்மானம் அனுப்பியது. இதுவே எழுத்துறையில் இவர் பெற்ற முதல் சன்மனமாகும். இவர் 'தெருக்கூத்து' என்ற சிறுகதைக்கு முதல் பரிசீனைப் பெற்று அந்த பத்திரிக்கையில் இவருக்குப் பரிசுத் தொகையாக நூறு ரூபாய் அனுப்பி வைக்கிறது. எழுத்துத் துறையில் வல்லிக்கண்ணன் பெற்ற முதல் பரிசுத் தொகை இதுவாகும். 'வல்லிக்கண்ணன் எழுதுவது மட்டுமின்றி பிற மொழியில் இருந்தும் சில கதைகளைத் தமிழாக்கம் செய்து இருக்கிறார். 1956-ல் டால்ஸ்டாய் கதைகள் சிலவற்றைத் தமிழாக்கம் செய்தார். வல்லிக்கண்ணன் இலக்கிய ஆளுமை மிக்கவராகத் தடம் பதித்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகம் அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் வல்லிக்கண்ணன் கையெழுத்துச் சுவடியை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**கடித இலக்கியம்**

கடிதம் என்பது மனிதனது வாழ்க்கைக் கூறுகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நாகரிக முதிர்ச்சி பெற்ற காலத்திலிருந்து மனிதன் தன் உணர்வுகளைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கு எழுதிக் காட்டும் முறையைக் கைக்கொண்டான் . எழுத்து மூலம் தன் கருத்துக்களை வெளிப்படுத்துவதன் வளர்ச்சி நிலைதான் கடிதம் வரைதலாகும். நடைமுறைத் தேவை கருதி எழுதப்பட்டு வந்த கடிதங்கள் இன்று இலக்கியத்தின் ஒரு கூறாக இடம்பெற்றுள்ளன. தனிமனிதன் தன்னுடைய தொடர்
புடையவருக்கு வெளிப்படுத்துவதற்காக மொழியை உருவாக்கினான். தன்னுடைய கருத்துத்தினை எழுத்துக்களாகக் கல், தோல், ஓலை, இலை, மரப்பட்டை, காகிதம் போன்ற பொருட்களில் எழுதி வந்தான். அவற்றில் முதன்மையாகக் கடிதத்தின் வாயிலாகத் தம்முடைய அன்பை வெளிபடுத்தினான். "கடிதம் என்னும் சொல், திருமுகம், முடங்கல், மடல்,கடிதாசி, காகிதம் என்பவற்றோடு நிருபம், பிசின், நறுக்கு, ஓலை,ஓலைத்தூக்கு, அஞ்சல், சீட்டுக்கவி என்னும் சொற்களும் கடிதம் என்னும் பொருள் தருவனவாக உள்ளன."[1] அன்றில் இருந்து இன்றையளவிலும் கடிதமானது வளர்ந்து கொண்டே இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**வாழ்வியல்**

> **"அரியது கேட்சின் வரிவடி வேலோய்**
> **அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"[2]**

என்கிறார் ஔவையார். ஔவை யார் பெறுதற்கரிய மானிடப்பிறவியை அம்மானுட வாழ்வானது, அன்றாட செயற்பாடுகள், பழக்கங்கள், பொருள், உளவியல் தேவைகள், பொழுது போக்குகள், உறவாடல், வேலை, குடும்பம், தனிமனிதன் என பல கூறுகள் மிக உயர்வாக எடுத்துரைப்பதை அறிய முடிகிறது. பொருளாதாரம், சூழலமைவு, சமூகம் இது போல பல செயல்களை வாழ்வியல் குறிக்கிறது. பொருளாதாரம், சூழலமைவு, சமூகம் இதுபோல வாழ்வியலானது, குடும்ப வாழ்வியல், அக்கால வாழ்வியல், படைப்புல வாழ்வியல், சமுதாய வாழ்வியல், தனிமனித வாழ்வியல் போன்ற வகைமைகள் உடையதாகவும் அறிஞர்களால் வகைப்படுத்தபட்டுள்ளன..

**குடும்ப வாழ்வியல்**

மண்ணில் வாழ்கின்ற மக்களில் சிலர் மட்டும் வரலாறாக வாழ்ந்து காட்டுகின்றார்கள். சிலர் வரலாற்றில் இடம் பிடிக்கிறார்கள் அப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவர்தான் வல்லிக்கண்ணன். இலக்கிய பணி ஒன்றே தன் வாழ்வுப் பணியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர். வல்லிக்கண்ணன் சிறுகதை , நாவல்கள் போன்ற எண்ணற்ற படைப்புகளைப் படைப்பதற்கு அவரின் குடும்பத்திற்கு பெரும் பங்கு உண்டு என்று சொல்லாம். மிகச் சின்ன வயதில் இருந்தே வல்லிக்கண்ணன் கதைகள் கேட்பதிலும், படிப்பதிலும் மிகவும் ஈடுப்பாடு கொண்டவர். இவருடைய அப்பா எக்சைஸ் சப் இன்ஸ்பெக்டர் சர்க்கார் அதிகாரி. வல்லிக்கண்ணனின் பெற்றோர் எண்ணற்ற அறிவு சார்ந்த கதைளைச் சொல்லுவார்.

“என் அப்பா தன் வாழ்க்கை அனுபவங்களை, தனது உத்தியோகத்தில் எதிர்பட்ட மனிதர்களைப் பற்றி எல்லாம் தினந்தோறும் இரவு நேரங்களில் கதைகதையாகச் சொல்லுவார். அம்மா வேறு விதமான கதைகளை, கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மத்தியில் வளர்ந்த நம்பிக்கைகள், பயங்கள், வித்தைக் கற்பனைகள் நிறைந்த விஷயங்களைக் கூறுவாள்.”[3] இவர்கள் மட்டுமின்றி வல்லிக்கண்ணனிற்கு எண்ணற்றவர்கள் அரிய பலக் கதைப்புத்தகங்களை வாசிப்பதற்குக் கொடுத்தார்கள்.

“அப்பாவின் வேலைக்காரர்கள் புராணக்கதைகளையும் திருடர் கதைகளையும் அவை போன்ற பலவற்றையும் சொன்னர்கள். பள்ளிக்கூடத்தில் உபாத்தியர்கள் கதைகள் சொன்னர்கள். லெபிரரி வாத்தியார் சுவை மிகுந்த கதைகள் கொண்ட புத்தங்களையே படிக்கத் தந்தார்.அப்புறம் பத்திரிக்கைகள் படிக்கக் கிடைத்தவாறு இருந்தன.”[4]

இதுபோன்ற தன்னுடைய இளம் வயதிலேயே கதைகளைக் கேட்டும், படித்தும், ரசித்ததால் கதை எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. வல்லிக்கண்ணன் இலக்கியத்தில் எண்ணற்ற படைப்புகளைப் படைப்பதற்கு அவர் குடும்பத்தினர் எவ்வாறு ஊக்குவித்தனர் என்பதை உணர முடிகிறது.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

**அக்கால வாழ்வியல்**

> **“தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
> **கற்றனைத் தூறும் அறிவு” [5]**

என்பார் திருவள்ளுவர். அன்றைய காலத்தில் புலவர்கள், அறிஞர்கள், தலைவர்கள், எழுத்தாளர்கள் என்று அறிவில் சிறந்தவர்கள் இருந்தாலும். அன்றையச் சூழலில் புத்தகங்கள் படிப்பதற்கு இல்லை என்றே கூறலாம். அப்படி ஓரிரு புத்தகங்கள் இருந்தாலும் புத்தகம் வாசிப்பவர்கள் ஓரிருமுறை வாசித்தப் பிறகே நம்மால் வாசிக்க முடியும். இப்போது எல்லா இடங்களிலும் நாம் தேவைக்கேற்ற பல புத்தங்களை வாங்கி படிக்க முடிகிறது. வல்லிக்கண்ணன் வாழ்ந்த காலக்கட்டம் ஒரு யுத்த காலம் என்றே சொல்லாம். ஒரு சில புத்தகங்கள் மட்டுமே அன்றைய நிலையில் பிரபலமாக இருந்திருக்கிறது என்று கூறுகிறார். “அந்நாட்களில் 1930-களில் இப்போது இருப்பது போல் ஏகப்பட்ட பத்திரிக்கைகள் கிடையாது. புத்தங்களும் நிறையக் கிடைத்ததில்லை என்றாலும் வாசிக்க தெரிந்தவர்கள். புத்தகம் படிப்பதில் ஆர்வம் உடையவர்கள் அப்படியும் படித்து முடித்த புத்தகங்கள் பல உண்டு. வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர் ரங்கராஜ், வை.மு.கோதைநாயகி அம்மாள் ஆகியோர் எழுதிய நாவல்கள் அவை”[6] வல்லிக்கண்ணன் இளமை காலத்தில் புத்தகங்கள் நிறைய படிப்பதற்கு இல்லை என்பதைக் குறிப்பிடுகிறார். இது போன்ற சூழலில் வல்லிக்கண்ணன் கதைகளைக் கேட்டும், படித்தும், எழுதியும் இலக்கியத்தில் எல்லா துறைகளிலும் தடம் பதித்து இலக்கிய ஆளுமையாக வல்லிக்கண்ணன் திகழ்கிறார்.

**படைப்புலக வாழ்வியல்**

தமிழ் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு தனி முத்திரைப் பதித்தவர் வல்லிக்கண்ணன். வாழ்கின்ற காலமெல்லாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் தமிழ் இலக்கியம் பற்றி பேசியும் எழுதியும் வாழ்ந்தவர். இலக்கியப் பணி ஒன்றையே தன் வாழ்வுப் பணியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர். பல எழுத்தாளர்களுக்கு எப்படி இலக்கியம் படைக்க வேண்டும் என்று அருகில் இருந்து சொல்லிக் கொடுத்தவர் வல்லிக்கண்ணன். “எனது முதல் கதை ‘பிரசண்ட விகடன்’ என்ற மாதம் இருமுறைப் பத்திரிக்கையில் வெளிவந்தது. 1939 என்று நினைவு. ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டி வளர்த்தார். கு.ப.ரா. இறந்த பிறகு – திருலோக சீதாராம் திருச்சி சேர்ந்து ‘சிவாஜி’ பத்திரிகையின் ஆசிரியர் ஆகிவிட்ட பின்னர் – ‘கிராம ஊழியன்’ பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பு எனக்கு வந்து சேர்ந்தது. மூன்று வருஷங்கள் நான் பணியாற்றினேன். அது மனோகரமான பொற்காலம் என்று என் உள்ளம் கூறும்”.[7] “நான் படித்தும் ரசித்தவை, கண்டு களித்தவை, கேட்டவை, அனுபவித்தவை அனைத்தையும் கதைகளாகவும், கட்டுரைகளாகவும், நாவல்களாகவும். சில சமயம்

கவிதைகளாகவும். எழுதி வந்திருக்கிறேன். எழுதுகிறேன்”[8]. இது போன்று படைப்புலகில் அவர் பயணிக்காத துறையே இல்லை எனலாம். படிப்பதிலும் எழுதுவதிலும் அளவில்லாத ஆர்வம் கொண்டு அதற்காகவே திருமணம் செய்து கொள்ளமால் வாழ்ந்தவர். ஒரு தேனீயைப் போல சுழன்று சுழன்று சுறுசுறுப்பாகக் தமிழ் இலக்கியத்திற்காக உழைத்தவர் வல்லிக்கண்ணன் என்று படைப்புலக வாழ்வியல் மூலம் அறிய முடிகிறது.

**சமுதாய வாழ்வியல்**

தனிநபர் குடும்பம் மற்றும் நம்மோடு வாழும் அனைவரும் சேர்ந்தது தான் சமுதாயம். சமுதாயம் என்பது பல்வேறு வகைகளில் உறவுகளைக் கொண்டு வாழ்வதைக் குறிக்கிறது. இனம், துறை, தொழில் போன்றவற்றை குறிக்கும். இச்சமுதாயத்தில் ஒவ்வொரு படைப்பாளியும் பல்வேறுபட்ட சிக்கல்களைக் கடந்து தான் சாதனை படைத்து வருகின்றன. இதில் படைப்பாளிகள் எந்த துறையில் எந்த வகைமையில் படைப்பினைப் படைத்தாலும் அதை ஒரு நூலாக இச்சமுதாயத்தின் முன் வெளிக்கொண்டு வரும் போது பல பிரச்சனைகளை எதிர் கொள்ளுகின்றன. வல்லிக்கண்ணன் பல இன்னல்களைக் கடந்து தான் இலக்கியத்தில் எல்லா வகையிலும் சுவடு பதித்துள்ளார்.

“நான் எழுத்தாளனாக வளரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். உறவினர் ஒருவர், சர்க்கார் விவசாய டிமான்ஸ்ட் ரேட்டர் ஆபீசில் கிளார்க் வேலை ஒன்றை எனக்கு தேடித் தந்திருந்தார். அந்த உத்தியோகத்தில் இருந்து கொண்டே, எழுத்தாளனாக முன்னேறுவதில் சிரமங்கள் குறுக்கிட்டன. அதனால், நான்கு வருஷங்கள் வேலை பார்த்த பிறகு அந்த உத்தியோகத்தை ராஜிராமா செய்தேன். வீட்டில் இருந்தவாறே படிப்பத்தையும் எழுதுவதையுமே வேலையாகக் கொண்டேன்.”[9]

வல்லிக்கண்ணன் என்ன சிக்கல்கள் அவருக்கு வந்தாலும் முயற்சியை மட்டும் கைவிடவில்லை. பத்திரிக்கையில் தன் பெயர் வர வேண்டும் என்ற இலக்கை நோக்கி ஓடிக் கொண்டே இருந்தார்.

“நான் என்னை தகுதிப்படுத்திக் கொள்வதற்காக, அடங்காத அறிவுப்பசியோடு, கிடைத்த புத்தங்களை எல்லாம் படித்தேன். ‘எழுதி எழுதிச் செல்லும் கை’ ஓயாமல் எழுதிக் கொண்டேயிருந்தது. காலம் உரிய பலனைப் பெற்றுத் தந்தது”[10]. குன்றாத ஊக்கமும், குறையாத ஆர்வம், தளராத தன்னம்பிக்கை, சலிக்காத உழைப்பு இவை நிச்சயம் வெற்றி தரும் என்பதை வல்லிக்கண்ணன் நமக்கு ஆழமாகப் பதிய வைக்கிறார்.

**தனிமனித வாழ்வியல்**

தனிமனித வாழ்வியல் என்பது ஒருவரின் அன்றாட வாழ்வியலில் அனைத்து செயல்பாடுகளையும் குறிக்கிறது. இதில் ஒருவர் வாழ்க்கையில் எதிர் கொள்கின்ற துணிவு, மன உறுதி, பயம், தன்னம்பிக்கை போன்ற இத்தனை வகைமையினையும் கடந்துதான் ஒரு தனிமனிதனாக இச்சமுகத்தில் வாழ வேண்டி உள்ளது. தனக்கென மட்டும் வாழாமல்

பிறருக்காவும் வாழ்கின்ற சூழலில் தனிமனித வாழ்வியல் அமைகிறது. “பிறகு ,1979ல் எனது ‘புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்’ புத்தகத்துக்கு சாகித்திய அகாடமிப் பரிசு கிடைத்த போது, தமிழ் நாட்டின் சகல பத்திரிக்கைகளும் எனது பணியைப் பாராட்டி எழுதி கவுரவித்தன. அது மட்டுமில்லை. நாட்டின் பலபல ஊர்களிலும் ரசிகர்கள் பாராட்டு விழாக்கள் நடத்தி மகிழ்ந்தார்கள். இவை எல்லாம் தமிழ் அன்பர்கள் என்னிடம் கொண்டுள்ள அன்பையும், இலக்கிய நண்பர்கள் என் மீது காட்டும் நட்பு உணர்வையும் நன்கு புலப்படுத்தின. தவமாக நான் மேற்கொண்ட இலக்கிய வாழ்க்கை, வீணாகிவிட வில்லை என்ற மனநிறைவு எனக்கு ஏற்பட்டது.”[11] வல்லிக்கண்ணன் பல கதை, கட்டுரை, நாவல், திறனாய்வு நூல்கள், தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு என்று பல நூல்களைப் படைத்துள்ளார். தனியாக நின்று இவ்வுலகில் இலக்கிய ஆளுமையாக நீங்காத இடத்தை பிடித்துள்ளார்.

**இளமையில் துணிவு**

வல்லிக்கண்ணன் திருநெல்வேலியிலேயே தங்கியிருப்பது தன் வளர்ச்சிக்குக் துணைப்புரியது என்று நினைத்தார். தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னை தான் பத்திரிக்கை உலகத்தின் எழுத்துத் துறையின் தலைநகரமாக விளங்கியது. புகழ்ப் பெற்ற எழுத்தாளர் அனைவரும் சென்னையில் தான் இருந்தார்கள். அதனால், வல்லிக்கண்ணனும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்பியவர் சென்னைக்கு நடந்தே சென்றார். அன்றைய காலத்தில் திருநெல்வேலியிருந்து சென்னை வருவதற்கு ரயில் செலவு **36** ரூபாய். அந்த தொகை கூட அவரிடமில்லை.

“திருநெல்வேலிக்கும் சென்னைக்கும் 400 மைல் தூரம். தினசரி 30 மைல் நடக்கலாம். அப்படி நடந்தால் பதினாலாவது நாள் சென்னையில் இருக்கலாம் எப்படியும் பதினைந்து அல்லது பதினாறு நாட்களில் சென்னை போய் சேர்ந்து விடலாம் என்று மனம் சொன்னது. ஒரு நாள் அதிகாலையில் நான் திருநெல்வேலி டவுண் வீட்டை விட்டுக் கிளம்பினேன். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல். கையில் காசு எதுமில்லை அப்போது எனக்கு வயது 22. இளமையின் துணிவு தான் எனக்குத்துணை”[12] வல்லிக்கண்ணன் ஒரு இலக்கியவாதியாக மட்டும் இல்லமால் பல துணிவான செயல்களையும் யாருடைய துணையுமின்றி பத்திரிக்கை துறையில் தடம் பதிக்க தனியாக நின்று போராடியவர். வாழ்க்கையோடும். சமூகத்தோடும் போராடி ’எழுத்தாளர் வல்லிக்கண்ணன்’ என்ற தடம் பதித்துக் காட்டியுள்ளர்.

**மன உறுதி**

வல்லிக்கண்ணன் பணத்திற்கும் பதவிக்கும் ஏன் புகழுக்கும் கூட மயங்காதவர், விலை போகாதவர். தனக்கென்ற வாழ்வில் எந்த சொத்து சுகத்தையும் சேர்த்து வைக்காமல் வாழ்ந்து மறைந்த தியாகி ஆவர். இலக்கியப் பணி ஒன்றையே தன் வாழ்வுப் பணியாகக் கொண்டு வாழ்ந்தவர். அவருடைய படைப்புகளைச் சந்தையில் விலை பேசி விற்க விரும்பாதவர்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

வல்லிக்கண்ணன். “பணமும் புகழும், மற்றும் வாழ்க்கை வசதிகளும் கிட்டுவதற்கு வகை செய்யக்கூடிய ஒரு தொழில் முறையாக எழுத்தை நான் ஏற்றுக் கொண்டிருந்தால், அப்படி எதுவும் கிடைக்க வழி இல்லையே என்று நான் விரக்தியும் வேதனையும் தோல்வி மனோபாவமும் பெற்றிருக்கலாம். நான் படிப்பதையும் எழுதுவதையுமே என் வாழ்க்கையாக வரித்தவன். அதன் சிரமங்களைக் தெரிந்து கொண்டே அப்படி ஏற்றிருக்கிறேன்.நானே தேர்ந்து அமைத்துக் கொண்ட வாழ்க்கையை நான் வெறுப்பதோ, கசந்து கொள்வதோ சாத்தியம் இல்லை. நான் படித்து ரசித்தவை. கண்டு களித்தவை, கேட்டவை அனுபவித்தவை அனைத்தையும் கதைகளாகவும் கட்டுரைகளாகவும், நாவல்களாகவும் சில சமயம் கவிதைகளாகவும் எழுதி வந்திருக்கிறேன் எழுதுகிறேன்.”[13] வல்லிக்கண்ணன் எந்த சூழ்நிலைகளில் வாழ்ந்தாலும் அவருடைய தன்னம்பிக்கை விட முயற்சியை கைவிடாமல் முயற்சி செய்து கொண்டே இருந்திருக்கிறார். நாம் ஒரு செயலை செய்யும் போது அதில் என்ன துன்பங்கள் நேர்ந்தாலும் மனஉறுதியுடன் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று வல்லிக்கண்ணன் எடுத்துரைக்கிறார்.

**நினைவுகள்**

வல்லிக்கண்ணன் அதிகம் பேசுபவர் அல்ல, கடிதங்கள் தான் அதிகம் எழுதுவார். வல்லிக்கண்ணன் கண்டது, கேட்டது, படித்தது, படிக்க விரும்பியது, அவரது கனவுகள், ஆசைகள் பயணங்கள், அவருக்குப் பிடித்தவர். பிடிக்காதவர் என்று எல்லோருக்கும், பல கருத்துக்களையும் கடிதங்களை எழுதி அனுப்பி இருக்கிறார். அது போன்று கடிதங்கள் இன்றைய அளவிலும் நீங்க நினைவுகளாக உள்ளார். வல்லிக்கண்ணனுக்கு முந்தைய தலைமுறையைச் சேர்ந்த ஆற்றல் மிக்க படைப்பாளிகள், வல்லிக்கண்ணன் வயதில் சின்னவராக இருந்தாலும் அவரையும் அணியில் (கூட்டம்) ஒருவராக அங்கீகரித்து பாராட்டி அன்புடன் பழகி வந்தனர். வல்லிக்கண்ணன் இலக்கிய வாழ்க்கையில் அடைந்த அழகான நினைவுகள் என்றே கூறலாம். “கவிஞர் பாரதிதாசன் ஒரு முறை துறையூருக்கு வந்திருந்தார். ‘கிராம ஊழியன்’ அலுவலகத்துக்கு வந்து பேசிப் பொழுதுப் போக்கினார். பாரதிதாசனின் உவமை நயம் குறித்து கட்டுரைத் தொடர் ஒன்றை நான் எழுதிய சமயம் அது. கவிஞர் மன நிறைவுடன் பாராட்டி என்னை வாழ்த்தியது நான் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்”[14]

“எழுத்தாளர் சி.சு. செல்லப்பா , தான் பிரசுரித்த புத்தகங்களைக் கல்லூரிகளில் விற்பனை செய்வதற்காக 1974-ல் திருநெல்வேலிக்கு வந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும், சில உயர் நிலைப் பள்ளிகளுக்கும் செல்லப்பாவுடன் நானும் போனேன். அது ஒரு இனிய இலக்கிய அனுபவம். அப்போது நெடுகிலும் என்னைப் பற்றியும் எனது எழுத்துக்கள் பற்றியும் இலக்கிய ஆர்வலர்கள் எவ்வளவு தூரத்துக்கு அறிந்திருந்தார்கள் என்று கண்டு கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அது எனக்கு மகிழ்ச்சியும் புதிய உற்சாகமும்

தந்தது."[15] இது போன்று வல்லிக்கண்ணன் புதுமைப்பித்தன், கு.ப.ராஜ கோபாலன், ந. பிச்சமூர்த்தி, பி.எஸ்,ராமையா, மௌனி, திருலோக சீதாராம், வ.ரா., நாரண துரைக்கண்ணன் போன்ற கவிஞர்கள் எழுத்தாளர்கள் என்று பலருடனும் பயணித்திருக்கிறார் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

இலக்கிய ஆளுமையாகத் திகழும் வல்லிக்கண்ணன் இச்சமூகத்தில் எல்லா சூழல்களையும் சிக்கல்களையும் கடந்து இலக்கியத்தில் தடம் பதித்து இலக்கியத்திற்காவே வாழ்ந்து இருக்கிறார் என்றும் அவருடைய வாழ்வியலைப் பற்றி கூறுகிறார் என்பதை அவருடைய நினைவுகள் என்ற கையெழுத்துப் பிரதியில் எடுத்துரைப்பதாக நம்மால் இவ்வாய்வு கட்டுரை மூலம் நன்கு ஆராய்ந்து அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. கடித இலக்கியம் ப.12
2. ஔவையார் தனிப்பாடல் ப.81
3. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப.1
4. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப.2
5. திருக்குறள் ப. 87
6. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் பக்.2-3
7. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் பக்.4- 5
8. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 11
9. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 4
10. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 5
11. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 12
12. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் பக். 6 -7
13. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 11
14. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் ப. 9
15. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள் பக். 11 -12

**துணைநூற்பட்டியல்**

1. இலக்கிய ஆளுமைகளின் கடிதங்கள்(சுவடிஎண்: 287) (அ.கை சுவடித்துறை) தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
2. காமராசு. இரா., கடித இலக்கியம், சாகித்திய அகாதெமி, புதுதில்லி – 110001, மு.ப 2017
3. புலியூர்கேசிகன், ஔவையார் தனிப்பாடல்கள், சென்னை – 18 , மு.ப.: 2010
4. புலியூர்கேசிகன், திருக்குறள், பூம்புகார்ப் பதிப்பகம்,, சென்னை – 600108, பதிப்பு:2010